OS 57/2024

பி.வா.சா.1 வேலு த/பெ அண்ணாமலை

நாள் 10.02.2026

**குறுக்கு விசாரணை**

1. வாதி என்மீது என்ன வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் நான் 2 லட்சம் கடன் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். வாதி பிரபாகரனை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு அவரை யார் என்றே தெரியாது. நான் எந்த ஊரில் இருக்கிறேன் என்றால் கல்வாசல் கிராமத்தில் இருக்கிறேன். வாதி எந்த ஊரில் இருக்கிறாா் என்றால் அவா் எந்த ஊா் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் யாருடையது என்றால் அது என்னுடைய கையொப்பம் அல்ல. வா.சா.ஆ.1ல் சாட்சி கையொப்பம் செய்துள்ள முனிதாஸ் மற்றும் ஸ்ரீதர் அவர்களை தெரியுமா என்றால் தெரியாது. வாதி தரப்பில் 14.12.2023ல் அனுப்பிய அறிவிப்பு பற்றி தெரியுமா என்றால் அறிவிப்பை நான் வாங்கினேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம் அறிவிப்பு வாங்கிய போது கையொப்பம் போட்டேன். என்னுடைய எதிர்வழக்குரையில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது யார் என்ற விவரம் தெரியாது என்றும் வாதியை தெரியாது என்றும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான் வாதியை தெரியாமல் அறிவிப்பை எப்படி வாங்கினேன் என்றால் தெரியாமல் வாங்கிவிட்டேன்.

2. வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3ல் உள்ள கையொப்பம் ஒரே மாதிரி இருக்கிறது என்றால் பாண்டில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. நான் தான் கடன் வாங்கி கொண்டு பாண்டு எழுதி கொடுத்தேன் என்றாலும் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதியின் வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.